நல்லூர்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

முரசொலி

பக்கங்கள் நான்கு      விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 228 ஆங்கீரச ஆனி 28 (12.07 1992) ஞாயிறு

## பாதயாத்திரை குறித்து ஜனாதிபதி கிண்டல்

ஜே. வி. பி. நடவடிக்கைகளின்போது பாதயாத்திரை, சத்தியாக்கிரகம் செய்யாதவர்கள் இன்று மக்களுக்காகப் பேசுகின்றனர். இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று கிரியாலையில் இரு மாதிரிக் கிராமங்களைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார். அரசின் நடவடிக்கைகளை சிலர் சீர்குலைக்க முயல்கின்றனர். ஜே. வி. பி. காலத்தில் இவர்கள் மௌனமாக இருந்தனர் எனவும் அவர் சொன்னார்.

# செட்டிகுளத்தில் அதிகாலைவேளை இராணுவ முகாம் தகர்ப்பு!

## 47 படையினர் பலி, ஆயுதங்கள் மீட்பு

செட்டிகுளம் எல்லைப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்று நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளால் திடீரெனத் தாக்கி அழிக்கப்பட்டதில் அங்கிருந்த படையினரில் நாற்பத்தேழு பேர் முகாமினுள் கொல்லப்பட்டனர்.

சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தங்கியிருந்த இந்த முகாமை அதிகாலை 5 மணியளவில் சுற்றிவளைத்த புலிகள் அரை மணி நேரமாக தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நடைபெற்றதும் இந்த முகாமின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு அதனுடன் தாம் தொடர்பு கொள்ள முடியாமல் போனதாகவும் இராணுவ தலைமையகம் தெரிவித்ததாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

இம் முகாம் தகர்க்கப்பட்டதையடுத்து அங்கிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட நவீன ரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சில ராணுவத்தினர் காடுகளூடாகத் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாமில் நிறுத்தி வைக்கப்பட்ட இரு பவள் கவச வாகனங்களும் ஒரு புல்டோசரும் புலிகளால் அழிக்கப்பட்டன.

இச்சம்பவத்தையடுத்து தந்திரிமலை முகாமிலிருந்து உதவிக்கு வரமுயன்ற இராணுவம் மீதும் புலிகளின் மற்றொரு அணி தாக்குதல் தொடுத்தது.

இதில் இரு கவச வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

### பலவேகய-2 நடவடிக்கை முடிவடைந்ததாம்

கடந்த இரு வாரமாக நடைபெற்று வந்த பலவேகய-2 ராணுவ நடவடிக்கை முடிவடைந்துவிட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

வெற்றிலைக்கேணி முதல் ஆனையிறவு வரையிலான பகுதியில் தடை வேலியாக அமைப்பதே இந்த இராணுவ நடவடிக்கை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### முல்லை அடகு நகை திருட்டு; இராணுவ அதிகாரிகளும் காவலில்!

முல்லைத்தீவு இராணுவ முகாமில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த அடகு நகைகளில் ஒரு தொகுதி மாயமாக மறைந்தது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 12 இராணுவத்தினரும் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 12 இராணுவத்தினருள் அதிகாரிகள் சிலரும் அடங்குகின்றனர்.

விசாரணையைத் தொடர்ந்து மாயமாக மறைந்த அடகு நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

### அரச உயர் அதிகாரிகள் கப்பலில் செல்ல அனுமதி மறுப்பு

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்க உயரதிகாரிகள் கொழும்பு செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்துள்ளது.

ஆனால் யாழ் அரச அதிபர், கல்விப் பணிப்பாளர் ஆகிய இருவருக்கும் மட்டுமே கப்பலில் கொழும்பு செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசிய பிரச்சினைகள் சம்பந்தமாக கொழும்பு சென்று சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்த முடியாமல் சில அரசாங்க உயரதிகாரிகள் பெரும் சிரமத்திற்

...04 ஆம் பக்கம் பார்க்க

### பரீட்சை விடைத்தாள்கள் குமண கப்பலில் செல்லும்

யாழ் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சையின் விடைத்தாள்கள் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை குமண கப்பலில் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கத்தினால் எடுத்துச்செல்லப்படவுள்ளது.

இப்போட்டிப் பரீட்சை யாழ். மாவட்டம் பூராகவும் 41 மண்டபங்களில் நடைபெற்றன. 47

### தமிழக மீனவர்கள் மீதும் ஸ்ரீலங்கா கடற்படையினர் சூடு

கச்சதீவுக்கு அருகில் கடலில் நேற்று மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களின் படகுகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் ஏழு தமிழக மீனவர்கள் காயமடைந்தனர் அவர்களில் மூவர் இராமேஸ்வரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை இது தொடர்பாக இரு தமிழக மீனவர்கள் காணாமல் போய்விட்டதாகவும் காணாமல் போன

—04 ஆம் பக்கம் பார்க்க

### ● யாழ். செஞ்சிலுவைச் சங்கம் தலைவர், செயலாளர் ராஜினாமாச் செய்தனர்

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் தலைவர் டாக்டர் செ. சி. நச்சினார்க்கினியன், செயலாளர் ச. சிவானந்தராசா ஆகியோர் தமது பதவிகளை நேற்று மாலை ராஜினாமாச் செய்துள்ளனர்.

யாழ் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் இத்தகவலை டாக்டர் நச்சினார்க்கினியன் தெரிவித்தார்.

இதேபோல உபதலைவர் ஜி. ராஜேந்திரா, பொருளாளர் கே. சற்குணலிங்கம் ஆகியோரும் ராஜினாமாச் செய்துள்ளதாக இக்கூட்டத்தில் டாக்டர் நச்சினார்க்கினியனால் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் ராஜினாமாவைத் தொடர்ந்து யாழ் செஞ்சிலுவைச் சங்க கிளை தொடர்ந்தும் செயற்படுவதற்

—04 ஆம் பக்கம் பார்க்க

### செட்டிகுளத்தில் 6 போராளிகள் வீரச்சாவு

செட்டிகுளத்தில் நேற்று அதிகாலை இராணுவ முகாம் தாக்கிய சம்பவத்தில் ஆறு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

### மக்கள் அஞ்சலி

நேற்று முன்தினம் இயக்கச்சி பகுதியில் வீரச்சாவடைந்த சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படை அணியின் சிறப்புத்தளபதியான மேஜர் கிண்ணி (கந்தசாமி துரைரவீந்திரன்) யின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக பல இடங்களில் வைக்கப்பட்டது.

—04 ஆம் பக்கம் பார்க்க

### மண்டைதீவிலிருந்து கலிபர் தாக்குதல்

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 7. 30 மணியளவில் ஒரு மணிநேரமாக யாழ் கரையோர பகுதியை நோக்கி தொடர்ச்சியான கலிபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் இப்பகுதிக்கு வந்த ஹெலிகப்டர் ஒன்று பல தடவைகள் கரையோர பகுதி வட்டமிட்டு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது 47

### சட்டப்படியே இலங்கை நடக்குமாம்

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் நாடு கடத்தல் விவகாரத்தில் இலங்கை சட்டத்தை அனுசரித்து நடந்து கொள்ளுமென இந்திய வெளிவிவகார இணை அமைச்சரிடம் இலங்கை வெளிவிவகார இணை அமைச்சர் ஹரல்ட் ஹேரத் தெரிவித்துள்ளார்

### எழுச்சி தெருக்கூத்து

யாழ் குடாநாடெங்கும் யுத்த யாத்திரையும் எழுச்சி தெருக்கூத்தும் தற்போது நடைபெற்று வருகிறது.

நேற்றிரவு 7 மணியளவில் முத்திரைச்சந்தியில் இருந்து யுத்த யாத்திரை ஒன்று சட்டநாதர் கோவலடி வரை வந்து அங்கு எழுச்சி தெருக்கூத்தும் இடம்பெற்றுள்ளது 47

## ராணுவ நடவடிக்கையை நிறுத்தி அரசியல் தீர்வு காணுமாறு முன்னாள் தளபதி கோருகிறார்

சென்றவாரம் சிறிலங்கா விமானப்படையின் வை - 8 சீனரக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்பு செய்தியாளர் மத்தியில் பேசிய முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக அரசியல் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாண முயல்வதை நிறுத்தி அரசியல் தீர்வு காணும்படி கோரியுள்ளார்.

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஆயுதப்படையினரின் சில பெற்றோர்கள் சார்பில் அரசியல் தலைவர்களிடம் அவர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பொருத்தமான தீர்வொன்றை அரசியல்வாதிகள் காண முடியாதிருப்பதனால் தாம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நிறுத்தும்படி கொழும்பிலுள்ள இராணுவ உயர் அதிகாரிகளை வேண்டிக் கொள்வதாகவும் கூறினார்

இந்த வேண்டு

...04 ஆம் பக்கம் பார்க்க

### ‘வை-8’ குறித்து சபையில் கேள்விக் கணை

# விமானம் வீழ்ந்தமைக்கான காரணத்தை அறிவது சாத்தியமல்ல

### - பிரதமர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை இயக்கச்சிப் பகுதியில் விமானப் படையின் வை- 8 விமானம் வீழ்ந்தது குறித்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் பலரும் கேள்வி எழுப்பினர்.

இந்த விமானம் எவ்வாறு வீழ்ந்தது என்பது குறித்து அரசு அறிக்கை வெளியிட வேண்டுமெனவும் அவர்கள் அங்கு கோரினர்.

இவ் விவகாரம் தொடர்பாக பிரதமர் அங்கு உரை நிகழ்த்துகையில் ‘வை- 8’ விமானம் வீழ்ந்தமைக்கான காரணத்தை அறிவது சாத்தியமல்ல எனத் தெரிவித்தார்.

‘இந்த விமானம் வீழ்ந்து நொருங்கியது பற்றி ஆராய விமானப் படை விசாரணை மன்றமொன்றை நியமித்துள்ளதே? என உறுப்பினர்கள் சிலர் அச்சமயம் கேள்வி எழுப்பியபோது அம் மன்றம் 19 விமானப் படையினர் ஒரே சமயத்தில் உயிரிழக்கக் கூடிய சூழ்நிலை எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்தும் இவ் விடயத்தில் விமானப்படையின் சட்ட விதிகள் ஏதாவது மீறப்பட்டுள்ளனவா என்பது குறித்தும் உள்ளக விசாரணையையே மேற்கொள்ளும் எனவும் அதன் அறிக்கை எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாட்டு எச்சரிக்கை குறித்துப் பரிந்துரைக்குமெனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

வை- 8 விமானத்தை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தவில்லை என முன்னர் பிரதமரும், அரசும் மறுத்திருந்தமையும் தற்போது விமானம் வீழ்ந்தமைக்கான காரணத்தை அறிவது சாத்தியமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் ஒரு நல்ல ‘நகைச்சுவை’ என அவதானிகள் விமர்சித்துள்ளனர்.

## ‘வை-8’ பிரதம விமானியின் ஜனாசாத் தொழுகை கொழும்பில்

இயக்கச்சிப் பகுதியில் குண்டு வீச்சில் ஈடுபட்டிருந்தவேளை கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட இலங்கை விமானப்படையின் ‘வை - 8’ ரக விமானத்தின் பிரதம விமானியும் விமானப் படையின் சிரேஷ்ட இளம் அதிகாரியுமான விங் கமாண்டரும் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவருமான மர்கூம் பைசால் வசீரின் ஜனாசா தொழுகை கொம்பனித் தெருவிலுள்ள பள்ளி வாசலில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இடம் பெற்றது

இராஜாங்க அமைச்சர் அஸ்வர் உட்பட வேறுபல முஸ்லிம் உறுப்பினர்களும் இந்த தொழுகையில் பங்கு பற்றினர்.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட விமானி ஒருவரின் சடலத்தை விடுதலைப் புலிகள் மீட்டிருந்ததும், அரச படையினரால் எவரினது சடலத்தையும் மீட்க முடியவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## விமானத்தில் கொல்லப்பட்ட 19 படையினருக்காக வழிபாடு

இயக்கச்சியில் வை - 8 விமானம் விடுதலைப்புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட சமயம் கொல்லப்பட்ட 19 விமானப் படையினருக்கும் தெய்வ அனுக்கிரகம் வேண்டி விசேட பிங்கம வழிபாடு ஒன்றும் நேற்று முன்தினம் மாலை கொழும்பு ஹுனுப்பிட்டி கங்காராம விகாரையில் இடம் பெற்றது.

ஜனாதிபதியின் பாரியார், கூட்டுப்படைத்தளபதி ஜெனரல் ஹமில்ரன் வனசிங்க ஆயுதப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் கொல்லப்பட்டோரின் குடும்பத்தினர் ஆகியோர் இவ் வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

## வடக்கிலிருந்து செல்லும் பயணிகள் தொகையில் வீழ்ச்சி

வடக்கிலிருந்து வவுனியா நோக்கிவரும் பயணிகளின் எண்ணிக்கை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

முன்னர் நாளாந்தம் 7000 க்கும் மேற்பட்ட பயணிகள் வடக்கிலிருந்து வவுனியாவை நோக்கிப் பயணஞ் செய்ததாகவும், ஆனால் இப்போது அத்தொகை 100 ஆக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

## சிறந்த தமிழர் விருதுக்கு அமைச்சர் தொண்டா தெரிவு

இந்த வருடத்தின் சிறந்த தமிழர் என்ற விருது சுற்றுலாத்துறை கிராமிய தொழிற்துறை அமைச்சர் தொண்டமானுக்கு வழங்கப்படவுள்ளது.

தமிழக புத்திஜீவிகள் அரங்கு இவ் விருதுக்கு அமைச்சர் தொண்டாவைத் தெரிவு செய்துள்ளது

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆற்றிய சேவைக்காக இந்த விருது இவருக்கு வழங்கப்படுகிறது

சென்னை அடையாறு பூங்கா ஹோட்டலில் எதிர்வரும் 15 ஆம் திகதி நீதிபதி வேணுகோபால் தலைமையில் விருது வழங்கும் விழா இடம் பெறும்

பாராட்டுப் பத்திரம், தங்கப்பதக்கம், இந்திய நாணய பெறுமதியில் பத்தாயிரம் ரூபா காசோலை ஆகியன அமைச்சர் தொண்டமானுக்குக் கிடைக்கும்.

## தொடர்புகொள்ளும் மொழியிலேயே பதிலளிக்கப் பணிப்பு !

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அமைச்சுக்களுடனோ திணைக்களங்களுடனோ பொதுமக்கள் உத்தியோக பூர்வமாக கடிதத்தொடர்பு கொள்ளும் போது அவர்கள் எந்தமொழியில் தொடர்பு கொள்ளுகிறார்களோ அந்த அரச கரும மொழியிலேயே பதில் அனுப்ப வேண்டும் என வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

மேலும் பொதுமக்களின் கடிதங்களுக்கும் பதிலளிக்கும் போது தமிழ் அல்லது சிங்கள மொழியிலேயே பதிலளிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இயன்றவரை ஆங்கில மொழியில் பதில் எழுதுவதை தவிர்க்குமாறும் அவர் பணித்துள்ளார். (01)

## ஆடிவேல் இன்று ஆரம்பம்

கொழும்பு நாட்டுக்கோட்டைச் செட்டிமார் என்னும் நகரத்தார் நடத்தும் ஆடிவேல் வெள்ளிரத பவனி விழா இன்று 12 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் வியாபார நோக்குடன் இலங்கை வந்த செட்டியார் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தாம் வந்த காலம் முதல் ஆடிவேல் உற்சவ காலங்களில் காவடி எடுத்துக் கதிர்காமத்திற்கும் பாதயாத்திரை செய்துவந்தனர். அன்று முதல் ஆடிவேல் விழா கொழும்பில் ஆரம்பமானது.

## இணைப்புக்கு தொடர்ந்தும் எதிர்ப்பு

வடக்கு கிழக்கு இணைப்பை சுதந்திரக்கட்சி தொடர்ந்தும் எதிர்க்குமென சுதந்திரக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவிளம்பரம்

தேடப்படுகிறார்

கீரிமலை சிறாப்பர்மட ஓய்வூதியக்காரர் சிதம்பரம் சின்னாச்சி. கீழ் வரும் விலாசத்தில் உள்ள அலுவலகத்திற்கு உடன் வரவும். நிர்வாகி, 140, பலாலி வீதி திருநெல்வேலி 07033

யந்திரம்

சகல தெய்வங்களுக்குரிய யந்திரங்களும் வியாபார வசியம் செல்வச் செழிப்பு கண்ணூறு நாவூறு போன்றவற்றிற்குரிய எல்லா விதமான யந்திரங்களும் எம்மிடம் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 96 கோவில் வீதி (ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர். 07.21

## 1000 கோடி ரூபா செலவில்: கட்டுநாயக்காவுக்கு கடுகதி வீதி

அதிவேகமாக, துரிதமாகப் பிரயாணம் செய்யக்கூடிய வகையில் கொழும்புக்கும்-கட்டுநாயக்காவுக்குமிடையில் 29.06 கிலோ மீற்றர் நீளமுடைய கடுகதி வீதியொன்றை அமைப்பதற்கான போக்குவரத்து அமைச்சின் யோசனையை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது

இந்த நெடுஞ்சாலையை ஆரம்பிப்பதற்கு 1000 கோடி ரூபாவுக்குமேல் செலவாகும்.

இக் கடுகதி வீதியால் மணித்தியாலமொன்றுக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் வாகனங்கள் செல்லக்கூடியதாக நான்கு மார்க்கங்கள் இருக்கும்.

இந்த விசேட வீதியைப் பயன்படுத்த விரும்புபவர்கள் பணம் செலுத்தவேண்டும்,

## கந்தளம ஹோட்டல் விவகாரம்; பீடாதிபதிகளுககு பிரதமர் கடிதம்

உத்தேச கந்தளம ஹோட்டல் விவகாரம் தொடர்பாக பிரதமர் டி. பி விஜேதுங்க மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளுக்கு விளக்கக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

‘கந்தளம ஹோட்டல் தொடர்பாக எதிர்ப்பியக்கம் நடத்திவரும் சக்திகள் குறுகிய அரசியல் இலாபத்திற்காகவும் மக்களை ஆத்திரமூட்டுவதற்காகவுமே அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன’ என அக்கடிதத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## ஆசிரியர்களின் விவரங்களை அறிக்கையாக வெளியிட முயற்சி

01.01 89 தொடக்கம் 01.07 92 வரை ஆசிரிய சேவையில் செய்யப்பட்டுள்ள நியமனங்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றை வெளியிட கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது

இதன் காரணமாக 01,01 89 லும், 31,12 90 லும் 31, 12 91 லும், 01,2,92 லும், 01 07 92லும் கோட்ட ரீதியாக உள்ள பாடசாலைகளின் மாணவர்களின் தொகையையும் இக் காலப்பகுதியில் ஆசிரிய சேவையில் இருந்த ஆசிரியர்களின் விவரங்களையும் அவரவர்களுடைய தராதரங்களுக்கேற்ப பிரித்து உடன் அனுப்பிவைக்குமாறு கல்விச் சேவைச் சபையின் தலைவர் சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார். 01

## மினி பஸ்களில் ரிக்கற் வழங்கப்படுவது கட்டாயமாகிறது

மேல் மாகாணசபை தனியார் பஸ்களில் ரிக்கற் வழங்குவதைக் கட்டாயப்படுத்தியுள்ளது.

மேல் மாகாண சபை எல்லைக்குள் சேவையிலீடுபடும் தனியார் பஸ்களில் ரிக்கற் இன்றிப் பயணம் செய்யும் பயணிகளிடம் 50 ரூபா அபராதம் அறவிடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

மேல் மாகாண போக்குவரத்துச் சபையின் ரிக்கற் பரிசோதகர்கள் தனியார் பஸ்களில் அக்டோபர் முதலாம் திகதி முதல் திடீர்ப்பரிசோதனையில் ஈடுபடுவார்கள்.

## ‘தர்மாச்சாரியர் சேவை’ க்கு சமயக் குருக்கள் நியமனம்

சமயக்கல்விக் குறிக்கோளை பாடசாலைகளில் வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கும் நோக்குடன் சமயக்கல்விக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அப்பாடசாலைகளைச் சேர்ந்த சமயக் குருக்கள் ‘‘தர்மாச்சாரியர் சேவை’’க்கென கல்வி உயர் கல்வி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான கடிதங்கள் உரிய மாகாண கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட தர்மாச்சாரியார்களுக்கும் கல்வி உயர் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (01)

## டார்ஜிலிங்கில் 72 மணித்தியால ஹர்த்தால்

கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி விடுத்த அழைப்பின் பேரில் டார்ஜிலிங் மலைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை ஆறு மணி முதல் எழுபத்தியிரண்டு மணித்தியால ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது,

தற்போதைய பாராளுமன்றக் கூட்டத் தொடரில் அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் நேபாளி மொழி சேர்க்கப்படுவதற்கான திருத்தம் கொண்டுவரப்படுவதை எதிர்த்தே இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

## மேலும் 6000 அகதிகளை திருப்பி அனுப்ப நடவடிக்கை

தமிழகத்திலிருந்து மேலும் 6000 ஈழ அகதிகள் விரைவில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என தமிழக அகதிகள் புனர்வாழ்வு அதிகாரி இராமதாஸ் தெரிவித்தார்

இவர்களில் 4000 அகதிகள் திருமலைக்கும் மிகுதிப்பேர் தலைமன்னாருக்கும் அனுப்பி வைக்கப்படுவர்

ஏற்கனவே 23126 அகதிகள் இலங்கைக்குத் திரும்பியனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் 88 ஆயிரம் அகதிகள் இன்னமும் தமிழகத்தில் உள்ளனர் எனவும் இராமதாஸ் கூறினார்.

# இவ்வார இராசிபலன்

12 . 07 . 1992 - 18 . 07 . 1992

### மேடம்

உங்களுக்கு நடக்க இருக்கும் நல்காரியமொன்றால் கவலை ஏற்படும். தொழில் தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பு, கொண்டாட்டங்கள் நடக்கும், சகோதரங்களால் அலைச்சல் கொடுக்கும். 12, 13 ஆம் திகதிகளில் கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டாம்.

### இடபம்

உங்களுக்கு தொழில் தானத்தில் 16 ஆம் திகதிக்குப் பின்பு பிரச்சினைகள் ஏற்படும் பொருள் விஷயங்களில் அவதானமாக இருக்கவும், பேச்சு வார்த்தைகளில் நண்பர்களுடன் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும், இடமாற்றங்களால நன்மைகள் ஏற்படும், 14, 15 ஆம் திகதிகளில் பிரயாணம் செய்ய வேண்டாம்.

### மிதுனம்

உங்களுக்கு அலைச்சலான காலமாகும். குடும்பத்தினரின் வைத்தியச் செலவு அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கலில் வீண் பிரச்சினை ஏற்பட்டு மனம் வருந்த வேண்டி வரும், தொழில் தானத்தில் புதியபோக்கு ஏற்படும், 15, 16, 17 ஆம் திகதிகளில் அவதானமாக இருக்கவும்.

### கடகம்

உங்களுக்கு எதிர்ப்பாராத நன்மைகள் ஏற்படும். சகோதரங்களின் சுபகாரியங்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள், தொழில் தானத்தில் நண்பர்களுடன் வாக்குவாதப்படுவீர்கள். பொருள் இழப்பு ஓரளவு களவுபோக இடம் உண்டு சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படும், 17, 18 ஆம் திகதிகளில் பிரயாணத்தைத் தவிர்க்கவும்,

### சிங்கம்

உங்களுக்கு பகட்டமான காலமாகும், தொழில் தானத்தில் மனநிம்மதியற்ற செயற்பாடுகளால் வேதனைப் படுவீர்கள். குடும்பச்செலவு அதிகரிக்கும், உறவினர் ஒருவரின் உதவியால் நன்மைகள் ஏற்படும், போக்குவரத்திலும், கொடுக்கல், வாங்கலிலும் அவதானமாக இருக்கவும், 15, 16 ஆம் திகதிகளில் அவதானமாக செயற்படவும்,

### கன்னி

உங்களுக்கு காலில் காயங்கள் வரலாம், போக்குவரத்தில் அவதானமாக இருக்கவும், தொழில் தானத்தில் மேலதிகாரிகளுடன் அவதானமாக இருக்கவும். தூரதேசச் செய்திகளால் நன்மைகள் ஏற்படும், தகப்பன் வழியினரால் வீண்பழி சுமத்தப்படும் எக்காரியங்களிலும் பிணை நிற்காதீர்கள், 16 ஆம் திகதி பிரயாணத்தைத் தவிர்க்கவும்.

நல்லூர் சோதிடர்
இ. மகாதேவா

### துலாம்

உங்களுக்கு தொழில்தானத்தில் பிரச்சினைகள் ஓரளவு தணிந்துவிடும் குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும் சகோதரங்கள் நன்மை சொல்லமாட்டார்கள் அயலவர்கள் பொறாமையால் வேதனை தருவார்கள் தூர இடங்களுக்கு பிரயாணங்கள் செய்வதைத் தவிர்க்கவும் சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படும்.

### விருச்சிகம்

நீங்கள் தடைப்பட்ட மங்கள காரியங்களைச் செயற்படுத்துங்கள், சகோதரங்களால் சோதனைகள் ஏற்படும் தொழில் தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் ஏற்படும் மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள் மறைமுகச் சத்துராதிகள் தொடர்ந்து வேதனை தருவார்கள் சகோதரர்களுக்கு இடமாற்றங்கள் ஏற்படும்.

### தனு

உங்களுக்கு உடல் நலம் பாதிக்கப்படும் குடும்பத்தில் ஒருவரின் பிரச்சினையால் வேதனை கொடுக்கும் இனஜனங்களுடன் வீண் வாக்குவாதங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில. விலகிக் கொடுங்கள், பெரியவர்களின் உதவிகளால் ஓரளவு நன்மைகள் ஏற்படும், 16, 17 ஆம் திகதிகளில் பிரயாணங்களைத் தவிர்க்கவும்

### மகரம்

உங்களுக்கு பெண்களால் உதவிகள் கிடைக்கும் கைகால் விறைப்பு அல்லது காயங்கள் சிலருக்கு ஏற்படலாம், சகோதரங்களால பிரச்சினைகள் ஏற்பட்டபடி இருக்கும், தூரத்துச் செய்திகளால மனக்கலக்கம், பொருள் இழப்பும் ஏற்படும், ஆலய தரிசனம் ஆறுதலைத்தரும்.

### கும்பம்

உங்களுக்கு அந்நியர்களால சில நன்மைகள் ஏற்படும் தொழிலஸ்தானத்தில உங்கள் மீது குறை கூறியவர்கள், வெட்கப்படுவார்கள், சிலருக்கு காணி பூமிப் பிரச்சினைகள் சாதகமாகும் பூர்வ புண்ணியக் காரியங்கள் அல்லது பொதுத் தொண்டுகளால சிலர் புகழ் அடைவார்கள் இடமாற்றத்தால நன்மைகள் ஏற்படும். 16 ஆம் திகதிக்குப் பின்பு பிரயாணத்தைத்தவிர்க்கவும்.

### மீனம்

நீங்கள் செய்யும் செயல்களால சிலவேளை வேதனை அடைவீர்கள், சிலருக்கு அடிக்கடி அலைச்சல ஏற்படும், உறவினர் ஒருவரின் பிரிவு வேதனைதரும். இடமாற்றத்தாலும் பெரியவர்கள், நண்பர்களின் உதவியாலும் நன்மை அடைவீர்கள் தொழில் தானத்தில மேலதிகாரிகள் உதவுவார்கள்.

---

# வீடியோ திரையிடலுக்கு இன்று முதல் கட்டுப்பாடு

தமிழீழத்தில் வீடியோ திரைப்படங்களைக் காண்பிப்பதற்கு இன்று முதல் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக மையப்பணியகம் விடுத்துள்ள அறிக்கை இங்கு முழுமையாகத் தரப்படுகிறது.

பெரும் போரைச் சந்தித்து எம் தாயகம் துடித்துக்கொண்டிருக்கின்றது, விடுதலையை அவாவி நிற்கும் மக்களும், போராளிகளும் போர்க்களங்களிலும், தயாரிப்பு வேலைகளிலும் ஓய்வின்றிப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலான மக்கள் இந்தப் போராட்டத்தை தங்கள் போராட்டமாகவே கருதி. அவலங்களுக்கு மத்தியிலும் நிலைபெறுத்து நிமிர்ந்து நிற்கின்றனர் ஆனால் குறைந்த தொகையினரான ஒரு கூட்டம் இந்த மண்ணை ஒரு கேளிக்கை நிலமாகக் கருதி எம் மக்களின் வாழ் நிலையையும். விடுதலைப் போரையும் எச்சப்படுத்த எத்தனிக்கின்றது வீடியோத் திரைப்படங்கள் மூலமும் கலை நிகழ்வுகள் என்ற போர்வையிலும் காலத்துக்கொவ்வாத கருத்துக்களை மக்கள் மனங்களில் விதைக்க முற்படுகின்றனர்,

மக்களின் தனிமனித உணர்வுகளையும் கருத்துக்களையும் பெரிதும் மதிக்கும் நாங்கள் எங்கள் உயிரினும் மேலான போராட்டத்திற்கு ஊறு விளைவிக்கும் எந்த நிகழ்வுகளையும் அனுமதிக்கப் போவதில்லை. சீரழிவுக் கருத்துக்களைச் சிந்தும் மலிவான உணர்வுகளுக்குத் தீனி வழங்கும் தென்னிந்தியத் திரைப்படங்களையும உலகெங்கும் தடைசெய்யப்பட்டுள்ள ஆபாசப்படங்களையும் தமிழீழத்தில் திரையிடுவதனால் ஏற்படும் ஆபத்துக்களை அவதானித்துள்ளோம், எனவே சமீபகாலமாக தளர்த்தியிருந்த கட்டுப்பாடுகளை மீண்டும் அமுலப்படுத்த எண்ணியுள்ளோம், இதன்படி வீடுகளில் அவ்வில்லங்களுக்குரிய உறுப்பினர்கள் மட்டும் அமர்ந்து முற்றாகத் தடைசெய்யப்பட்ட திரைப்படங்கள் தவிர்ந்த ஏனைய திரைப்படங்களை பார்வையிடுவதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் கிடையாது. ஆனால் உள அரங்குகளாகவும், சிறிய தியேட்டர்களாகவும் வீடுகளை உருவாக்கி பணவருவாயைக் கருத்திற்கொண்டு வீடியோப் படங்களைக் காண்பிப்பது இன்று முதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது, குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பார்வையிடுவதாகவும் குடும்ப மங்கள நிகழ்வு வீடியோப் படங்கள் மட்டுமே பார்வையிடுவதாகவும் கூறிக்கொண்டு ஓரிடத்தில் தினசரி பலர் கூடிப் பணவருவாயைக் கருத்திற்கொண்டு வீடியோப் படங்களைத் திரையிடுவது எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது- இப்படியான ஏமாற்றுத் திரையிடுதல்கள் இன்று முதல் முற்றாகவே தடை செய்யப்படுகின்றன,

கோவில் திருவிழாக்களை உள்ளிட்டும், சனசமூக நிலையங்கள், மற்றும் சமூக பொது அமைப்புக்களின் விழாக்கள் என்று கூறிக்கொண்டும் திறந்த வெளிகளில் வீடியோத் திரைப்படங்கள் திரையிடுவது இன்று முதல் தடைசெய்யப்படுகின்றது. பக்திப்படங்கள் என்றும் புராணப்படங்கள் என்றும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டு, மக்களையும் ஏமாளிகளாக்கும் வீடியோப் படங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு மக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்,

இன்னும் சிலர் ஆங்காங்கே அறைகளில் கூடி உலகெங்கும் தடைசெய்யப்பட்டுள்ள ஆபாசமான, பாலுறவு சம்பந்தமான ஆங்கிலத் திரைப்படங்களையும், மலிவான மனித உடலிச்சைகளைத் தூண்டும் படங்களையும் பார்வையிட்டு வருவது எமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது, இன்று முதல் இவை தடைசெய்யப்படுவதுடன் மீறுவோர் மீதும் கடும் நடவடிக்கை எடுப்பதுடன் ஒளிபரப்புச் சாதனங்களும் பறிமுதல் செய்யப்படும்,

ஒளிபரப்புச் சாதனங்களையும், மின்சார உபகரணங்களையும் வாடகைக்கு விடும் தனிநபர்களோ, நிறுவனங்களோ இவ்விதிமுறைகளை நன்குணர்ந்து தடைசெய்யப்பட்ட நிகழ்வுகளுக்கு தங்கள் சாதனங்களை வாடகைக்கு கொடுக்கவேண்டாமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் மீறுவோரின் சாதனங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் எக்காரணம் கொண்டும் மீள ஒப்படைக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்,

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

எம் மண்ணின் நலன் கருதியும், எம் புனிதப்போரின் பெறுமானம் கருதியும் நல்ல தலைமுறையொன்றை உருவாக்க வேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் பேரவா கருதியும் வகுக்கப்படும் சரியான இந்த விதிமுறைக்கமைய நடந்து நாட்டுக்கும் உங்களுக்கும், எமக்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்,

---

# அரசுக்கு பலத்த அடி கொடுக்க கடற்புலிகள் தயாராகிறார்கள்

- மறவன்

"தமிழீழ போராட்டத்தில் கடல் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை தமதாக்க சிறிலங்கா அரசு முயல்கிறது. கடந்த வருடம் ஆனையிறவில் ஏற்பட்ட போர் விடுதலைப் புலிகளுக்கு தமது கடற்பகுதியில் தமது பலத்தை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கியது. இன்று சிறிய பிரிவாக இயங்கும் கடற்புலிகள் பிரிவு தனது பலத்தை அதிகரித்து விரைவில் சிறிலங்கா அரசுக்கு பாரிய நெருக்கடியைக் கொடுக்கும்" என்று 'நெய்தல்' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் தலைமை உரையாற்றிய யாழ் மாவட்டக் கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு மறவன் தெரிவித்தார்.

இவ்விழா யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் இடம் பெற்றது

விடுதலைப்புலிகள் கடற்புலிகள் அமைப்புக் கலைஞர்களை இணைத்து விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் உருவாக்கிய "நெய்தல்' பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு வைபவத்தை கடற்கரும்புலி மாலிரன் கொலின்சின் பெற்றோர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

வரவேற்புரையை கடற்புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி நளாயினியும், ஆசியுரையை வணபிதா ஜோசப் ஜீ.ஏ.பிரான்சிஸ் அடிகளாரும், வெளியீட்டு உரையை விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும், சிறப்புரையை மு.வே.யோ. வாஞ்சிநாதன், இன்னிசை வேந்தர் பொன், சுந்தரலிங்கம் ஆசிரியர் திரு. அ.சா அரியகுமார் ஆகியோரும் ஆற்றினர்.

ஒலிப்பதிவு நாடாவின் முதற்பிரதியைத் தமிழீழ விடுதலைப்புலிகள் கல்விப் பொறுப்பாளர் யோகரத்தினம் - யோகி கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசைக்கு வழங்கினார், 01

---

# ஊழியர்கள் பாதிப்பு

குடாநாட்டுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதையடுத்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களின் செயற்பாடுகளிலும் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

கிளிநொச்சி பகுதியிலிருந்து யாழ் வந்த பல ஊழியர்கள் மீண்டும் தமது அலுவலகங்களுக்குத் திரும்ப முடியாத நிலையே இதற்குக் காரணமெனவும் சொல்லப்பட்டது. (55)

---

# கால்நடைத்தீவன உற்பத்தியாளர் கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள கால்நடைத் தீவன உற்பத்தியாளர்களுக்கான கூட்டம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தாவடியிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவன மையப் பணியகத்தில் நடைபெறவுள்ளது. கால்நடைத் தீவன உற்பத்தியாளர்களையும் தவறாது சமூகமளிக்கும்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

---

# வட-கிழக்கு இணைப்பிற்கு ஐ.தொ.காவும் ஆதரவு!

வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்படுவதை இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆதரிக்கிறது என அதன் தலைவர் வி.பி.கணேசன் அறிவித்துள்ளார்.

ஏழு தமிழ்க் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பு உள்ளிட்ட நான்கு அம்சத் திட்டயோசனையையும் தாம் ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்;

---

# சிதம்பரத்தின் பொறுப்பு நரசிம்மராவிடம்!

மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளமையடுத்து அவரது அமைச்சுப் பொறுப்புக்களை பிரதமர் நரசிம்மராவ் ஏற்றுள்ளார்.

பிரதமருக்கு உதவியாக தொழிற்துறை இணை அமைச்சராக உள்ள பி.ஜே. குரியன் வர்த்தகத்துறை இணை அமைச்சராகவும் இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## எரிமலைமீண்டும் வெடிக்கும்

பிலிப்பைன்ஸில் உள்ள எரிமலைகள் அடுத்தவாரம் மீண்டும் வெடிக்கலாமென விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

கடந்த வருடமும் இந்த எரிமலை வெடித்துப் புகை கக்கியிருந்தது இந்த நூற்றாண்டின் வெடித்த எரிமலைகளில் மிகவும் கடுமையானது இது எனவும் கூறப்படுகிறது.

## மண்ணெண்ணெய் விநியோகத்தர்களுக்கு

## யாழ். அரசாங்க அதிபர் வேண்டுகோள்

தற்போதைய போர்க்கால சூழலில் மண்ணெண்ணெயை தருவிப்பதில் வேறு பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் வரை தங்கள் வசமுள்ள மண்ணெண்ணெயை பொதுமக்களுக்கு விநியோகிக்கும்படி யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் சகல மண்ணெண்ணெய் விநியோகஸ்தர்களையும் கேட்டுள்ளார்.

ஒரு காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாக இருந்த மண்ணெண்ணெய் பல பிரதிநிதித்துவத்தின் பேரிலும் தமது விதப்புரையின் பேரிலும் போதிய அளவு யாழ் மாவட்டத்துக்கு வந்து கொண்டிருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் விபரத்தை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளது.

இதன்படி மே மாதம் மட்டும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 885 780 லீற்றரும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 359 100 லீற்றரும் முல்லைத்தீவுக்கு 241,600 லீற்றரும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதப் புள்ளி விபரங்களும் விரைவில் வெளியிடப்படவுள்ளன எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். 47

## தொழில் நுட்பக்கல்லூரி பரீட்சை மாணவர் அரச அதபரிடம் புகார்

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் 1989, 1990 1991 ஆகிய வருடங்களுக்கான ஆண்டு இறுதிப் போட்டிப் பரீட்சைக்கான இறுதிக்கட்ட படைவரைஞர்களுக்கான வினாத்தாள்கள் உரிய நேரத்தில் யாழ்ப்பாணம் வந்து சேராததால் இப் பரீட்சை தடைப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் நேற்று அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரைச் சந்தித்து பரீட்சை நடைபெற ஆவன செய்யுமாறு கோரியுள்ளனர்.

அடுத்தவாரம் கொழும்பு செல்லும் போது பரீட்சை ஆணையாளருடன் இது தொடர்பாக தான் பேச்சு நடத்தவுள்ளதாக அரசாங்க அதிபர் அவர்களுக்கு உறுதியளித்தார். 47

## வழக்கு தாக்கல் செய்ய எவரும்நிதிசேகரிக்கவில்லை

1992 ஏப்ரல் க. பொ. த விசேட பரீட்சையின் புள்ளிகளை பல்கலைக்கழக அனுமதிக்கு வேறுபடுத்தியதை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்வதற்கு எவரும் நிதி சேகரிக்கவில்லை என இது தொடர்பாக நியமிக்கப்பட்ட நடவடிக்கைக் குழு அறிவித்துள்ளது.

## முன்னாள் பனாமா ஜனாதிபதிக்கு 40 வருடச் சிறை!

போதை வஸ்து கடத்தல் மற்றும் விற்பனைக் குற்றங்கள் தொடர்பாக அமெரிக்க நீதிமன்றமொன்று பனாமா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் நோரியேகாவுக்கு 40 வருடகால சிறைத் தண்டனை விதித்துள்ளது.

'கொக்கேய்ன்' என்னும் போதைப் பொருளை பனாமா மூலம் அமெரிக்காவுக்குக் கடத்த கொலம்பியாவைச் சேர்ந்த கடத்தல்காரர்களுக்கு உதவியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1989 ஆம் ஆண்டு பனாமா முற்றுகையிட்ட அமெரிக்கத் துருப்புக்கள் நோரியேகாவை அமெரிக்காவுக்கு பிடித்துச் சென்றிருந்தன

## காலமானார்

## குழந்தைவடிவேல் ரமேஸ்(தீபன்)

(ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவன்)

பருத்தித்துறை பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் செல்லையா குழந்தைவடிவேல், இந்திராதேவி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரன் 10 07, 1992 இல் அகாலமரணமானார். இவர் ராஜேஸ், ரமணி, ரதீஸ், ரமணன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் திரு திருமதி யோகநாதன், இராசமலர் (கனடா), திரு திருமதி கணேஷ், தர்மபூபதி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான திரு திருமதி மார்க்கண்டன், ராணி, திரு திருமதி தங்கவேல், ராஜேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் திரு திருமதி கணேஷமூர்த்தி அம்பிகா, திரு திருமதி வேணுகோபால் திலகவதி, திரு திருமதி விஜயரட்ணம் கமலாதேவி, திரு திருமதி இராமச்சந்திரன் இராசலட்சுமி, திரு திருமதி தணிகாசலம் பொன்னம்மா, திரு திருமதி சுப்பிரமணியம் கண்மணி, திரு திருமதி நடராஜா கமலா, திரு திருமதி சண்முகநாதன் திலகவதி காலஞ்சென்றவர்களான திரு திருமதி தணிகாசலம் தெய்வானைப்பிள்ளை, திரு திருமதி தங்கராசா கனகம்மா ஆகியோரின் அன்பு மருமகனுமாவார் இறுதிக்கிரியைகள் 10 ஆம் திகதி நடைபெற்றதென்பதை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

செ குழந்தைவடிவேல்
(தந்தை)

பழையதபாற்கந்தோர் ஒழுங்கை,
பருத்தித்துறை.

07035

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் ஜெயலி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 12-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## தவறான தகவல்

நேற்றைய பத்திரிகையில் வெளிவந்த வீரச்சாவு விபரத்தில் கலைக்கோவேள் (அப்புத்துரை பிரபாகரன்) நீர்வேலி என்ற போராளியின் விபரம் வீரச்சாவு எனத் தவறுதலாக வெளியிடப்பட்டது எனவும் இத்தவறான செய்திக்கு வருந்துகிறோம் எனவும் விடுதலைப் புலிகள் அரசியல் துறை யாழ் மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

ராணுவ...

கோனை கிரேட்ட இராணுவ அதிகாரிகள் அரசியல் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் இது ஒரு வெற்றி கொள்ள முடியாத யுத்தமென அவர்களுக்கு கூறும்படியும் அவர் கேட்டுள்ளார்.

ஆயுதப்படையிலுள்ளவர்கள் மட்டுமல்லாமல் ஏனைய இளைஞர்கள் கொல்லப்படுவதையும் சொத்துக்கள் நாசமாக்கப்படுவதை நிறுத்தும்படியும் எயர் மார்ஷல் ஹரி குணதிலக மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதுவித பலனும் இல்லாத இந்த யுத்தத்திற்கு இரண்டாயிரம் கோடி ரூபா செலவு செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிண்ணி ..

இன்று தென்மராட்சி வடமராட்சி பகுதிகளில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின்னர் வடமராட்சி மாவீரர் மயானத்தில் புனித புதைகுழியில் வைக்கப்படும்.

இதேபோல வலலாயில் வீரச்சாவு எய்திய இந்திரனின் (மயில்வாகனம் சந்திரன்) புகழுடல் பல இடங்களில் நேற்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தலைவர்...

வான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. 19, 47

தமிழக...

மீனவர்களை இந்திய கடற்படையினர் தேடிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த மற்றொரு சம்பவம் இடம்பெற்றதாகவும் அதில் நான்கு தமிழக மீனவர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரச ..

குள்ளாகினர்.

அரசாங்க அதிபர் அடுத்த வாரம் கொழும்பு செல்லும் போது இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 47

## க. பொ. த. மாணவருக்கு இலவச கல்விக் கருத்தரங்கு

யாழ் கல்வித்திணைக்கள வர்த்தகத்துறையும் வடமராட்சி பட்டப்படிப்புகள் கல்லூரியும் இணைந்து வர்த்தகத்துறை உயர் வகுப்பு மாணவர்களுக்கான இலவச கருத்தரங்குகளை நடத்தவுள்ளன. க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கு 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தோற்றவுள்ள வர்த்தகத்துறை மாணவர்களுக்கான இக்கருத்தரங்குகள் எதிர் வரும் 13 ஆம் திகதி வடமராட்சி பட்டப்படிப்புகள் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது 11

## சென்னைக்கருகே யுத்த ஒத்திகை

சென்னைக்கு அருகே வங்கக் கடலில் கடற்படை நடவடிக்கைகள் பற்றிய ஒத்திகையில் பங்கேற்க இந்திய கடற்படையின் போர்க் கப்பல்களும் நீர் மூழ்கிக் கப்பல்களும் சென்னைத் துறைமுகத்துக்கு வந்துள்ளன

எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நடைபெறும் இவ் ஒத்திகையில் இந்தியாவின் நவீன கடற்படைக் கப்பல்களும் இந்திய விமானப்படையின் யுத்த விமானங்களும் பங்குபற்றவுள்ளன

## பிரியாவிடை வைபவம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி யாழ் மாவட்டக் கல்வித் திணைக்களத்துக்குப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள திரு. ப. சண்முகராசாவுக்கு இன்று 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரிவுபசார விருந்து வைபவம் ஒன்று நடைபெறவுள்ளது

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் தலைமையில் இவ் வைபவம் நடைபெறும். 18

## கருத்தரங்கு

சைவ சித்தாந்த ஆய்வு வட்டம் நடத்தும் 3 ஆம் ஆண்டு நிறைவு விழா கருத்தரங்கு இன்று ஞாயிறு காலை 9-30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி அருள் மங்கை தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பேராசிரியர் நீ மரியசேவியர் அடிகள் ஆய்வுரை நிகழ்த்துவார்.

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை, தலைமையகம்

## பதவி வெற்றிடம்

1, ஆங்கில ஆசிரியர்
2. ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளர், ஆசிரியர்
3, தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர், ஆசிரியர்

மேற்படி பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன கல்வித்தகைமைகள், அனுபவம், ஆற்றல், ஆர்வம், சேவை செய்யும் மனப்பான்மை உள்ளோர் விரும்பப்படுவர்.

தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளருக்கு செய்முறைப் பரீட்சை 24 07.92 பிற்பகல் 1 00 மணிக்கு நடைபெறும். ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளருக்கான செய்முறைப் பரீட்சை 25, 07 92 பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறும். தமது தட்டச்சு இயந்திரங்களை கொண்டு வரவும்.

விண்ணப்பப் படிவங்கள் யாவும் 23 07 92க்கு முன் கிடைக்க கூடியதாக எமக்கு அனுப்பி வைக்கவும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

### தமிழ், ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிலும் மாணவர்கள்

மேற்படி கல்வி பயில விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை 24, 7 92க்கு முன் கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கவும். இதற்கான நேர்முகப் பரீட்சை 30 07 92 நடைபெறும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73. கண்டி வீதி,
யாழ்ப்பாணம்
11, 07, 92.

07036